# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.C.C.588/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா.1 |
| Name | : | தண்டபாணி |
| Father’s Name | : | த.பெ.காசி |
| Village | : | காமராஜர் நகர்(ஆவணவாடி) |
| Taluk | : | சேத்பட் |
| Calling | : | . |
| Religion | : | இந்து |
| Age | : | 34 |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 13.03.2026.

**எதிரி ஆஜர்.**

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் கட்டிட வேலை செய்கிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் நான்தான் கொடுத்தேன் அந்த புகார் அ.த.சா.ஆ.1 ஆகும். இந்த வழக்கு விபத்தில் இறந்துபோன நபர் காசி எனது தந்தை ஆவார்.

சுமார் 7 வருடங்களுக்கு முன்பு தேதி ஞாபகம் இல்லை. போகிபண்டிகை அன்று நான் வீட்டில் இருந்தபோது எனது தகப்பனார் ஆவணவாடி எதிர்மேடு என்ற இடத்தில் என் தந்தை நடந்து சென்று கொண்டிருந்தபோது எதிரே வந்த இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக எனது சித்தப்பா ஆறுமுகம் என்பவர் எனக்கு தகவல் சொன்னார்.

எனது சித்தப்பா காயம்பட்ட எனது தந்தையை வந்தவாசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச்சென்று சேர்த்தார் நான் சென்று பார்த்தேன். அவர் கவலைக்கிடமாக இருந்தார் பின்னர் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள்.

இது சம்மந்தமாக நான் மேற்படி புகாரை கொடுத்தேன். போலிசார் விசாரணை செய்தார்கள். என் தந்தையின்மீது விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனம் ஆஜர் எதிரி பயன்படுத்தியதாகவும் விபத்து ஏற்படுத்தியதாகவும் எனது சித்தப்பாவிடம் சொல்லி அவர் என்னிடம் சொன்னார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

சம்பவம் நடந்த சமயத்தில் நான் எங்கு இருந்தேன் என்றால் வீட்டில்தான் இருந்தேன். சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. சம்பவ சமயத்தில் சேத்பட்ரு வந்தவாசி சாலையில் பராமரிப்பு பணி நடைபெற்றுக்கொண்டிருந்ததா என்றால் உண்மைதான். அவ்வாறு சாலை பணி நடைபெறும்போது சாலையில் சாலை குண்டும் குழியுமாகவும், கற்களுடனும் காணப்படும் என்றால் சரிதான். என் தகப்பனார் இறந்துபோன சமயத்தில் என்ன வயது இருக்கும் என்றால் 80 வயதுக்குமேல் இருக்கும். புகாரை யார் எழுதியது என்றால் காவல் நிலையத்தில போலிசார் எழுதினார்கள். புகாரில் என்ன விவரம் எழுதப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. சம்பவம் நடைபெற்ற நேரம் மாலை 7.00 மணி என்றாலும் அது இருட்டு நேரமாக இருந்தது என்றால் சரிதான். விபத்தை கேள்விப்பட்டு என் தகப்பனாரை எங்கு சென்று பார்த்தேன் என்றால் வந்தவாசி அரசு மருத்துவமனையில் சென்று பார்த்தேன். என் தகப்பனாருக்கு வயது முதிர்வின் காரணமாக சைக்கிளில் செல்லும்போது அவரே கீழே விழுந்து விபத்தினை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. நஷ்ட ஈடு கோருவதற்காக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை.**

இல்லை.

// உண்மை நகல்//

Taken down by me in Open Court,
Read over to the witness and Admitted
by him/her to be correct.
Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.